கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

கலைமாணி மூன்றாம் ஆண்டுப் பரீட்சை – பருவம் I – 2016/2017

**PSC 3150–அரசியல் விஞ்ஞான ஆய்வின் முறையியல்களும் அணுகுமுறைகளும்**

நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
ஒவ்வொரு விடையும் அதிகபட்சம் இருபது (20) புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

01.

a. 'அரசியல்' என்ற பதம் பற்றி கலந்துரையாடுக.

b. பின்வரும் கேலிச்சித்திரம் பிரபல கேலிச்சித்திரக் கலைஞரான அவந்த ஆட்டிகலவின் வலைப்பூவிலிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கேலிச்சித்திரத்தை அவர் "*ஜெயந்தி குரு-உதும்பால இமயமலை ஏறிய முதல் இலங்கையரானார்*" என்ற தலைப்பிட்டு வழங்கியிருந்தார்.

ஓர் அரசியல் விஞ்ஞான மாணவராக பின்வரும் இக்கேலிச்சித்திரம் சித்தரித்த அரசியல் பற்றி கலந்துரையாடுக.




02. அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கு விஞ்ஞானத்தின் தத்துவம், ஆய்வு அணுகுமுறைகள் மற்றும் ஆய்வு முறையியல் ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் கலந்துரையாடுக.

03.

a. பின்வருவனவற்றின் அடிப்படையில் பண்பறி மற்றும் அளவறி ஆய்வு முறைகளுக்கிடையிலான வேறுபாடுகளை ஒப்பிட்டு விளக்குக.

   i. அறிவாராய்ச்சியியல்கள்

**P.T.O**

ii. குறிக்கோள்கள் அல்லது நோக்கங்கள்
iii. ஆய்வாளரின் வகிபங்கு

b. சமூக விஞ்ஞான ஆய்வுக்கு 'கலப்பு முறைகள்' மிகவும் பயனுள்ளவை எனச் சிலர் பரிந்துரைக்கின்றனர். அந்தப் பரிந்துரை தொடர்பான உமது நிலைப்பாட்டை விளக்குக.

04.

a. அரசியல் விஞ்ஞான ஆய்விற்கான பின்வரும் ஆய்வு அணுகுமுறைகளில் ஏதாவது இரண்டின் (2) முக்கியத்துவத்தை விபரிக்க.
   i. நிறுவன அணுகுமுறை
   ii. மார்க்சிய அணுகுமுறை
   iii. பகுத்தறிவுத் தெரிவு அணுகுமுறை
   iv. பெண்ணிய அணுகுமுறை

05. இலங்கையில், பெண்கள் உள்ளூர் மட்ட கூட்டான இணைவுச் செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்படுகிறபோதும், சட்டவாக்க அமைப்புகளில் அவர்களது பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகவே உள்ளது. இப்புதிரை நீங்கள் கற்பதற்கும் எமது சமூகத்தில் அரசியல்சார் தீர்மானம் எடுத்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் குறைவாகக் காணப்படுவது ஏன் என்பதை கண்டுபிடிப்பதற்கும் எவ்வகையான ஆய்வு அணுகுமுறையை அவ் ஆய்விற்கு நீர் பிரயோகிப்பீர்? அத்தகைய ஓர் அணுகுமுறை ஏனைய கிடைக்கக்கூடிய அணுமுறைகளுடன் ஒப்பிட்டபோது இவ்வாய்வுக்கு மிகப் பொருத்தமானது என நீர் ஏன் கருதுகின்றீர் என்பதையும் விளக்குக.

06.

a. அரசியல் விஞ்ஞான ஆய்வில் கீழைத்தேய அல்லது பாரம்பரிய நடத்தைவாத அணுகுமுறையின் மெய்மையியல் மற்றும் அறிவாராய்ச்சியியல் நிலைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுக.
b. பாரம்பரிய நடத்தைவாத அணுகுமுறையிலிருந்து பின்-நடத்தைவாத அணுகுமுறை எவ்வாறு வேறுபடுகிறது என சுருக்கமாகக் கலந்துரையாடுக.
c. நடத்தைவாத ஆய்வு அணுகுமுறையை உள்வாங்குவதினூடாக ஒரு அரசியல் விஞ்ஞான ஆய்வு வினா எவ்வாறு பதிலளிக்கப்படலாம் எனக் கலந்துரையாடுக.

07.

a. அரசியல் விஞ்ஞானத்தில் பொருள்கோடல் அணுகுமுறையை சமூக நிகழ்வுகளைக் கற்கும்போது நம்பிக்கைகள், எண்ணங்கள், மற்றும் உரையாடல்கள் மீது கவனம் செலுத்துகின்றது. ஒரு உதாரணத்துடன் விபரிக்குக.
b. அரசியல் விஞ்ஞானத்தில் பொருள்கோடல் அணுகுமுறையின் மெய்மையியல் மற்றும் அறிவாராய்ச்சியியலின் நிலைப்பாடுகளைக் கலந்துரையாடுக.

***************